பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

19 ஆனி 27 றஜப் 23 இதழ் 150

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 11-7-77

# எம். ஜி. ஆர். முயற்சி வெற்றி:

## தமிழ்நாட்டுக்கு காவிரி நீர்கிடைக்கும்

பெங்களூர், ஜூலை 10

தமிழ்நாட்டுக்கு ஓரளவு காவிரிநீரை தந்துதவ கர்நாடக அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

இதற்குப் பதிலாகதமிழ்நாடு அரசு கர்நாடக அரசுக்கு மின் சாரம் கொடுத்துதவும்.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் எடுத்துக்கொண்ட முயற்சி யால் இந்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் குறைந்திருப்பதால் தமிழ்நாட்டுக்கு காவிரி ஆற்றி லிருந்து தண்ணீர் பெறுவக் கொள்வது தொடர்பாக தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் பெங்களூர் வந்து கர்நாடக முதல்வர் திரு. தேவராஜ் அர்ஸுடன் பேச்சுநடத்தினர். இதன் பயனுக மேற்படி ஏற்பாடு செய்துகொள்ளப்பட்டிருக்கி றது. இந்தப் பேச்சுக்களில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரனும்கலந்துகொண் டார். தமிழ்நாட்டுக்கு வழங் கப்படும் காவிரித்தண்ணீர் அளவு பற்றியும் கர்நாடகத் துக்கு வழங்கும் மின்சாரத்தின் அளவு பற்றியும் இருமாநில அதிகாரிகளும் பின் ஒரு திகதி யில் கூடி ஆலோசிப்பார்கள்.

கர்நாடக முதல்வரைச்சந் திக்க எம். ஜி. ஆர். பெங்க ளூர் வந்து சேர்ந்தபோது அவ ருக்கு விமான நிலையத்தில் அன்பான வரவேற்பு அளிக்கப் பட்டது.

## யாழ். வளாக விடுமுறை

யாழ்ப்பாணம், திங்.

21-ம் திகதி நடைபெறவிரு க்கும் பொதுத் தேர்தலையொட்டி இம் மாதம் 16-ம் திகதி

(6-ம் பக்கம் பார்க்க)

# 'தமிழ் ஈழக் குடியரசு வாக்கெடுப்பு இது'

யாழ்ப்பாணம், திங்கள்

''இப்பொழுதுத்தேர்தலை சுதந் திர- சமதர்ம- தமிழ் ஈழக் குடியரசை நிறுவுவதற்குத் தமிழ்த்தேசிய இனத்தின் கட் டளையைப் பெறும் வாக்கெடுப் பாகக் கொள்ளத்தமிழர் விடு தலைக் கூட்டணி தீர்மானித் திருக்கிறது'' என்று காங்கே சன்துறைத்தொகுதியில் த.வி. கூட்டணி வேட்பாளராகப் போட்டியிடும் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் விடுத் துள்ள அறிக்கை ஒன்றில் கூறி யுள்ளார்.

இவ்வறிக்கையில் அவர் கூறி யிருப்பதாவது:

''கடந்த முப்பது ஆண்டுக ளாகத்தமிழ்த்தேசியஇனத்தை உரிமை வேட்கைகொண்ட மக் களாகத் தம் ஒப்பற்ற தலைமை யின் கீழ் வழிநடத்திவந்த தந்தை சைல்வநாயகம் அவர் கள் திடீரென எம்மைவிட்டுப் பிரிந்த காரணத்தினுல், அவ ருடைய தொகுதியில் நான் தேர்தலுக்கு நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. சென்ற தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர்கள் வெற்றி பெற்ற தொகுதிக ளுக்கு அக்கட்சியைச் சேர்ந்த கூட்டணி வேட்பாளர்களையே நிறுத்துவதென்ற கொள்கை யடிப்படையில்வட்டுக்கோட்டை தொகுதியை அக்கட்சி வேட் பாளருக்குவிட்டு. தேர்தலில் ஈடுபடாது,கடந்த ஏழுவருடங் களாகப் பாராளுமன்றத்திற்கு வெளியில் நின்று இயங்கியது போல தமிழ் இனத்தின் விடு தலை இயக்கத் தொண்டனுக பணிபுரிய விரும்பினேன்,

### நடா, சேனுதி வற்புறுத்தல்

ஆனுல் காங்கேசன்துறைத் தொகுதியின் முதுபெரும் இயக் கத் தலைவரும், தந்தையின் இடத்திற்கு நியமிக்கப்பட வேண்டியவருமான திரு. சு. நட ராசா அவர்களும், இளைஞர் இயக்கத் தலைவரான மாவை சேனுதிராசாவும்; மற்றும்இயக் கப்பெரியோர்களும் வற்புறுத் தியதின் பேரில் தந்தைவிட்டுச் சென்ற வெற்றிடத்தில் காங் கேசன்துறைத் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக உங்கள் ஆத ரவை நாடி நிற்கிறேன். தந்தை யின் இடத்தை நிரப்பும்தகுதி எனக்கு இல்லை என்று நான் கருதியபோதிலும், முப்பது வருடங்களாக அவர்வழியில் நடந்த தொண்டன் என்ற வகையில் - அவருடைய அரசி யற் சித்தாந்தங்களை நன்கு அறிந்த அவரின் சீடன் என்ற வகையில், அவருடைய கொள்கைகளைக்கொண்டுநடத் துவேன் என்ற உறுதியோடு உங்கள் முன் நிற்கின்றேன்.

''தமிழ்த்தேசிய இனத்தின் மிகக் குறைந்த உரிமைகளையா வது புதிய அரசியல் அமைப் பில் சேர்த்துக்கொள்ளத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப் பினர்கள் எடுத்த முயற்சிகள் முழுதாக நிராகரிக்கப்பட் டன் தமிழ் மக்கள்மீது அந்த அரசியல் அமைப்புத் திணிக் கப்பட்டது.



### பெரும்பணி என்மீது

''தமிழ் ஈழம் முழுவதும் 24 வேட்பாளர்களைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நிறுத்தி யிருக்கிறது. அவர்கள் எல் லோரும் வெற்றிபெறுவது மாத்திரமன்றி மிக அதிகப்படி யான வாக்குகளைப் பெறுவது அத்தியாவசியம். அதன் பொருட்டுத் தமிழ் ஈழம் எங் கும் சென்று எமது வேட்பா ளர் சார்பில் பிரசாரஞ் செய்ய வேண்டிய பெரும் பணி என் மீது சுமந்திருக்கிறது என் பதை நீங்கள் அறிவீர்கள்.

''ஆகவே உங்கள்எல்லோரை யும் உங்கள் வீடுகளில் வந்து சந்திக்க வாய்ப்பற்றவனுக இருக்கிறேன். என் சார்பில் எம் இயக்கத் தொண்டர்கள் உங்களைச் சந்திக்க வருவார் கள். நீங்கள் ஒவ்வொருவரும் மற்றையோருக்கு இத் தேர்த லின் முக்கியத்துவத்தை விளக்கி அவர்களையும் தமிழ் ஈழம் என்ற இலட்சியத்திற்கு வாக்களிக்கச் செய்யுமாறு வேண்டுகிறேன். இத் தேர்தலில் ஒவ்வொரு தமிழ் வாக்காள ரும் தன் சொந்தத் தேர்தலா கக் கருதி எனக்கு ஒத்துழைப் புத் தருமாறு பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

''தமிழ் மக்களின் கட்ட ளையை நிறைவேற்ற சுதந்திர ஈழ அரசை நிறுவ என் உடல், பொருள், ஆவி அத்தனையை யும் அர்ப்பணித்து உழைப் பேன் என்று உறுதிகூறுகி றேன்.'' (கி.உ)

## எல்லைச் சண்டை

லண்டன், ஜூலை 10

றொடீஷியசாம்பியதுருப்புகளுக் கிடையில் நேற்று 10 மணி நேர எல்லைச்சண்டை நடை பெற்றுள்ளதாக அறிவிககப் படுகிறது. (உ)

# இரத்தவசதியின்றி சத்திர சிகிச்சை

## மரணவிசாரணை அதிகாரி கண்டனம்

யாழ்ப்பாணம், திங்கள்

''ஆஸ்பத்திரியொன்றில் சத் திர சிகிச்சை செய்யப்படும் போது அதற்குத் தேவையான இரத்தம் இருந்தால் மட்டுமே செய்யவேண்டும். சத்திர சிகிச்சை செய்தபின் இரத்தத் திற்காக யாழ். பெரியாஸ்பத் திரிக்கு நோயாளியை அனுப் புவதால் காலதாமதம் ஏற் பட்டு உயிருக்கும் ஆபத்துஏற் படஇடமுண்டு''

தனிப்பட்ட ஆஸ்பத்திரி யொன்றில் நடந்த சத்திர சிகிச்சைக்குப்பின் மரணமான வசாவிளானைச் சேர்ந்த இரத் தினசாமி மருதநாயகியின் மரண விசாரணையின்போது யாழ். மரணவிசாரணை அதி காரி சட்டத்தரணி எஸ். எஸ். பிரான்சிஸ் மேற்கண்ட கருத் தைத் தெரிவித்தார்.

29 வயதான மருதநாயகி 5 மாதக் கர்ப்பிணியென்றும், 8 மாதத்திற்கு முன்னரே திரு மணம் செய்தாரென்றும் விசா ரணையில் கூறப்பட்டது

மலேரியா காய்ச்சலினுல் பாதிக்கப்பட்டுச் சிகிச்சைக்குப் பின் சுகமாகி இப்பெண் ணுக்கு திடீரென்று இரத்கப் பெருக்கு ஏற்பட்டு, தனிப் பட்ட ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக் குப்பின், யாழ்ப்பாணம் ஆஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்குமரணமானுர் என விசா ரணையில் கூறப்பட்டது.

விசாரணையின்பின் இயற்கை மரணம் எனத் தீர்ப்பளிக்கப் பட்டது. (க-அ)

# 'பொதுமக்கள் கஷ்டத்துக்கு நாம் காரணமல்ல'

## மருத்துவமாதர்கள் கூறுகிறுர்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். ஆஸபத்திரியில் மருத் துவ மாதர்கள் வேலைநிறுத்தத் தால் பொதுமக்களுக்கு அசௌ கரியங்கள் ஏற்பட்டிருப்பதற்கு தாங்கள் காரணமல்லவென்று வேலைநிறுத்தம் செய்யும் மருத் துவ மாதர்கள் சங்கம் விடுத் துள்ள அறிக்கையில் கூறியுள் ளனர்.

யாழ். அரசினர் வைத்திய சாலையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள மருத்துவமாதர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:

யாழ். பெரியாஸ்பத்திரி நிர்வாகம் தமது நிர்வாகச் சீர்கேட்டினுல் ஏற்பட்ட தவறைமூடிமறைத்து அப்பாவி யான மருத்துவமாதை நன்கு திட்டமிட்டு அநீதியான முறையில் தண்டித்ததையிட்டு எமது எதிர்ப்பைத் தெரிவித்து நேரடி நடவடிக்கையில் ஈடு பட்டோம்.

யாழ். பெரியாஸ்பத்திரியில் பிரசவ வார்ட்டினுள் எவரும் எந்தநேரத்திலும வந்து போகக் கூடியதாக பாதுகாப்பில் லாத நிர்வாகஅமைப்பினுள் வேலை செய்யும் மருத்துவ மாதை அநீதியாக வேலை நீக் கிய கடிதம் உடனடியாக வாபஸ் பெறப்படவேண்டும் என்றும் எமது கோரிக்கை நீதியானது என்பதை சுகா தார திணைக்களத்தில் வேலை செய்யும் சகல தொழிற்சங்கங் களும் ஏற்றுக் கொண்டன.

பொது மக்களுக்கு அசௌக ரியங்கள் ஏற்படுவதற்கு மூல காரணம் நாங்கள் அல்ல நிர் வாகத்தின் சீர்கேடுதான் என் பதை பொது மக்கள் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். மீண்டும் பாரபட்சமற்ற விசா ரணை நடத்தி குற்றம் உள்ள வர்கள் தண்டிக்கப்பட வேண் டும் என்பது எமது கோரி க்கை. (கி)

# இந்திராவின் தேர்தல்செலவு ரூ. 2 கோடிக்குமேல்

## பீகார் அரசு அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 10

முன்னுள் பாரதப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் பொதுத்தேர்தல் சுற்றுப் பயணத்துக்காக 2 கோடி ரூபாவுக்கு மேல் பீஹார் அரசாங்கம் செலவிட் டுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட் டுள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் திருமதி காந்தி யின் தேர்தல் சுற்றுப்பய ணத்திற்காக 2 கோடி ரூபா வுக்கு மேல் செலவிடப்பட் டுள்ளதாகவும், மாவட்ட நிர்வாகங்களும் திருமதி காந்தியின் சுற்றுப் பய ணத்துக்காக பணம் செலவிட்டுள்ளதாக வும் இத்தொகை இறுதி யாக்கப்படவில்லை என்றும் நேற்று பீஹார் சட்டசபை யில் நிதியமைச்சர் கைலாஷ் மிஸ்ரா தெரிவித்தார்.

### கிஸிங்கர்

இதேவேளை முன்னுள் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஹென்றி கிஸிங்கர் சஞ்சய் காந்திக்கு ஆதரவுதேடும் வகையில் கட்டுரைஒன்றினை வெளியிட்டுள்ளார் என்று ஜனதா கட்சி உறுப்பினர் சுப்பிரமணியசுவாமி நேற்று குற்றஞ்சாட்டினுர். (உ)

# கால்களை இழந்த யுவதிக்கு தொண்டர் சபை உதவி

யாழ்ப்பாணம், திங்கள்

அண்மையில் சுன்னுகம் ரயில் நிலையத்தில் ரயில் வண்டியை விட்டு கீழிறங்கிய போது விபத்துக்குள்ளாகி இரு கால் களையும் கைவிரல்களையும் இழந்த லலிதாதேவி சரவண முத்து (17 வயது) என்ற இளம்பெண்ணுக்கு மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலயசைவவாலி பர் தொண்டர்சபை, 656 ரூபா வசூலித்து வழங்கியுள் ளது.

இந்நிதியைத் தொண்டர் சபையினர், கோட்டைக்காடு குராவத்தை, அளவாவுடை, மயிலணி வடக்குப் பகுதிகளில் சேகரித்து யாழ். ஆஸ்பத்திரி யில் சிகிச்சை பெற்றுவரும் செல்வி லலிதாதேவியிடம் கொடுத்துதவினர். (ஈ)

## வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர் சட்டநாத சிவன்கோயில் வருடாந்த உற்சவம் இன்றுகொடியேற்றத் துடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 19-ம் திகதி தேர்த்திருவிழாவும், 20ந்திகதி தீர்த்தோர்சவமும் நடை பெறும். (இ)

### மணிவாக்கு

ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஈசனுறைந்தால், யார் யாரைப் பகைக்க முடியும்?

— காந்திமகான்


# ஈழநாடு
# THE EELANAADU


## மலையகத் தமிழர்

மலையகத் தமிழர் சார்பாக இரு தொகுதிகளிலேயே வேட்பாளர் போட்டியிடுகின்றனர். ஒன்று மஸ்கேலியா, மற்றொன்று கொழும்பு மத்திய தொகுதி. இவ்விரு தொகுதிகளிலும் தமிழர் கணிசமாக வாழ்கின்றனர். மூன்று பிரதிநிதிகளைத் தெரிவு செய்யக்கூடிய இவ்விரு தொகுதிகளிலும் ஒவ்வொரு வாக்காளருக்கும் மூன்று வாக்குகள் உண்டு. ஒருவர் தமது மூன்று வாக்குகளையும் ஒரு வேட்பாளருக்கே அளிக்கலாம். ஆகையால் தமிழ் வாக்காளர், ஒரு தமிழரைத் தெரிவு செய்யக்கூடிய வாய்ப்பு இவ்விரு தொகுதிகளிலும் அளிக்கப்பெற்றுள்ளது. தமிழரின் வாக்குகள் பிரிவுபடாமல் இருந்தாலே ஒரு தமிழர் இங்கு தெரிவு செய்யப்படக் கூடிய வாய்ப்புண்டு.

பல வருடங்களுக்கு முன், மலையகத் தமிழர் சார்பிலே அரசாங்க சபையில் ஏழு அங்கத்தவர். இருந்தனர் ஜனத்தொகை வீதாசாரப்படி 14 ஸ்தானங்கள் அவர்களுக்கு இருக்க வேண்டுமென்று சோல்பரிக்கமிஷன் தெரிவித்தது. ஆனல் அவர்களது வாக்குரிமை ஒரே அடியாக பறிக்கப்பட்டதால், மலையகத் தமிழருக்கு ஒரு ஸ்தானம்கூட கிடைக்கவில்லை. அதற்குப்பதில் ஒரே ஒரு நியமன அங்கத்தவரே சென்ற சில வருடங்களாக சபையில் இருந்து வந்தார்.

இந்தத் தடவைதான் மஸ்கேலியா, நுவரேலியா தொகுதியை மூன்று மெம்பர் தொகுதியாக்கி ஒரு மலையகத் தமிழர் வரக்கூடிய சந்தர்ப்பம் அளிக்கப்பெற்றுள்ளது. கொழும்பு மத்தியத் தொகுதியிலும் தமிழருக்கு உள்ள ஒரு வாய்ப்பை, மலையகத்தமிழர் பயன் படுத்த முன்வந்துள்ளார். இவ்விரு தொகுதிகளிலும் இரு வேட்பாளர்களும் வெற்றிபெற முடிந்தாலும் மலையகத் தமிழருக்கு இரண்டே ஸ்தானங்கள்தான் கிடைக்க முடியும்.

மலையகத்திலே சிங்களச் சமூகத்தின் மத்தியில் வாழும் அவர்கள், தனித்துப்பிரிந்து வாழமுடியாதென்றும், ஏனைய பிரஜைகளைப்போலவே சமஉரிமையுடன் வாழவேண்டுமென்பதே தங்கள் கோரிக்கை என்றும், அதுவே தங்கள் தேவையென்றும் இ. தொ. கா. தலைவரான திரு. எஸ். தொண்டமான் கொழும்பில் ஒருகூட்டத்தில் விளக்கியுள்ளார். தங்களது கோரிக்கைகளையும் ஆதரிக்க எந்த தேசியக் கட்சியும் முன்வராததால் இந்தப் பொதுத்தேர்தலில் எந்த தேசியக்கட்சியையும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரிக்கமாட்டாதென்றும், ஏனைய 20 அல்லது 22 தொகுதிகளில் உள்ள தோட்டத் தொழிலாளர் இவ்விடயத்தில்சுதந்தரமாகத் தமது விருப்பப்படி யாரைஆதரிப்பதென்று தீர்மானிக்கலாம்என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாம் ஏற்கெனவே இப்பத்திகளில் கூறியுள்ளது போல், மலையகத் தமிழரின் பிரச்னை இன்னும்தீரவில்லை. நாளுக்கு நாள் அவர்களின் சங்கடங்கள் அதிகரித்துவருகின்றன. புதிய தேசியப் பேரவை மூலம் இவர்களது பிரச்னைகள் தீரமுடியுமா என்பது மிகவும் சந்தேகம். இந்தியாவில் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது. இலங்கையிலும் புதிய சபை தெரிவு செய்யப்படுமாதலால், இரு அரசுகளும், முடிந்தால் பிரிட்டிஷ் அரசாங்கமும் இந்த மனிதப் பிரச்னையைத்தீர்க்க தங்களுக்குள் ஒத்துழைத்து மனிதாபிமானத்துடன் இதற்கு ஒரு தீர்வுகாணவேண்டும். மலைநாட்டுத் தமிழரின் பிரச்னைகளை சுமுகமாகத் தீர்த்தாலே நம்நாடு அமைதியாகவும் சுபீட்சமாகவும் முன்னேற முடியும்.

## 'நான் உங்கள் வீட்டுப்பிள்ளை' வட்டு. தொகுதியில் 'அமிர்'

சுழிபுரம், ஞாயிறு

நான் உங்கள் வீட்டுப்பிள்ளை நான் எங்கு சென்றாலும் உங்கள் சொத்தாகவே இருக்கின்றேன். நீங்கள்என்மேல் காட்டி வரும் அன்பை என்வாழ்வில் என்றும் மறக்கமாட்டேன். வட்டுக்கோட்டை தொகுதியில் எனது கடந்த காலக் கோட்டைகளாக விளங்கிய கிராமங்களில் பனிப்புலம் கிராமமும் ஒன்றாகும். இக்கிராமத்தில் வாழும் ஒவ்வொருவரையும் நன்கு அறிவேன். கடந்த காலத்தில் எனக்கு ஏற்பட்ட வெற்றியையும், தோல்வியையும் தத்தமது வெற்றி தோல்வியாகக் கருதும் இக்கிராமத்தவர்களின் அன்பு வெள்ளத்தில் சிக்கித் திளைக்கின்றேன். இவ்வாறு பனிப்புலத்தில் திரு. எஸ். தம்பையா தலைமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

திரு. அமிர்தலிங்கம் கூட்ட மேடைக்கு ஆதரவாளர்களால் தூக்கி வரப்பட்டார். நூற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட மாலைகள் சூட்டப்பட்டன.

வட்டுக்கோட்டை தொகுதி தமிழர் விடுதலை கூட்டணி வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசுவை ஆதரித்து இக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ். தம்பையா தலைமைவகித்தார்.

(உ)

## தேவி உற்சவம் இன்று ஆரம்பம்

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் இன்றுமுதல் தேவி மஹோற்சவம் ஆரம்பமாகிறது. பகல் 10 மணிக்கு பூஜை ஆரம்பித்து பகல் 10-45 மணிக்கு கொடியேற்றுவைபவமும் மாலை மணி முதல் 7-30 வரை பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி "கொடியேற்ற தத்துவம்" என்னும் பொருள்பற்றி பிரசங்கமும், இரவு 7-30 மணிக்கு செத்த மண்டபப் பூஜையும் பின் அம்பாள் கைலாச பர்வதத்தில் திருவீதிவலம் வருதலும், நவசந்தி ஆவாகலமும் நிகழும்.

(அ)

## "தமிழ் இனம்பிரிந்துசெல்வதற்கான அரசியல் யாப்பை தயாரிப்போம்"

### தமிழ்த்தலைவர்கள் அஞ்சலிக் கூட்டத்தில் 'அமிர்' உரை

யாழ்ப்பாணம், திங்கள்

"தமிழர்விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற அமைப்பை பகிஷ்கரிக்காமல், தமிழ்மக்கள் அளிக்கும் தீர்ப்பைக்கொண்டு. இந்த நாட்டின் தமிழினம் பிரிந்துசெல்- தற்கான முயற்சியாக ஆட்சிமன்ற உறுப்பினர்களால், தமக்கென ஒரு இறைமையுள்ள சுயாதீனமான குடியரசு யாப்பை தயாரிக்கும், இதை நாம் பாராளுமன்றத்தில், எதிரொலித்து. சிங்கள மக்கள் விரும்பி, சிநேகபூர்வமான முறையில், சிங்கப்பூரில் இருந்து மலேசியா பிரிந்தது போல் தமிழ்ஈழத்தைப் பிரித்துத்தந்தால் ஏற்போம் அல்லது நமது தலைவர்கள் விட்டுச் சென்ற இலட்சியத்தை அடைய போராடுவோம் இதே நேரத்தில், எமது பொருளாதார சமூகநலனில் பெரும் அக்கறை கொள்வோம்."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின ஆதரவில் நடந்த தமிழ்த்தலைவர்கள் அஞ்சலி விழாவில் கூறினர்.

இவ்விழாவுக்கு இலங்கை தமிழர் ஆசிரியசங்கத் தலைவர் திரு டி. எஸ். கே. வனசிங்க தலைமை தாங்கினர். திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நாம் செல்கின்ற பாதை கரடுமுரடான பாதை. இப்பாதையால் நாம் செல்கின்றபோது, சோதனைகள் பலவிதமாகத் தோன்றுவதுஇயற்கை இவ்வழியில், எம்மத்தியில் ஒற்றுமையைக்குலைக்கச் சிலர்தேர்தலில் நின்றாலும்; நாம் அடைகின்ற இலக்கை நிச்சயமாக அடைந்தே தீருவோம். பாடசாலைகளை அரசாங்கம்பொறுப்பேற்க முன்னர் சகல துறைகளிலும் முன்னோடியாக இயங்கியவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியர் சமூகந்தான் இந்த நாட்டில் ஒரு இயக்கப்போராட்டத்தை வெற்றிகரமாகநடாத்தக்கூடியவர்கள். கால வெள்ளத்தில் ஆசிரியர்கள் அரசியல் உரிமை பெற்றதனல், இனவிடுதலை விரைந்து கொண்டிருக்கின்றது".

"சிங்கள இனம் எம்மை அடக்கியாள நாம் அதிகாரம் வழங்கவில்லை. ஒருஇனம் இன்னெரு இனத்தை ஆளுவதனல் யுத்தத்தின் மூலம்வென்றிருக்க வேண்டும் அல்லது சட்டவாக்கத்தால் உறுதியளிக்கப்பட்டிருக்கவேண்டும். 1972ம்ஆண்டு இயற்ற பட்ட குடியரசு யாப்பை தமிழ் உறுப்பினர்கள் கையெழுத்திடாததனல், நம்மை ஆளுவதற்கு அதிகாரம் அளிக்கவில்லை நாம் எமதுபிரதேசத்தை திருப்பிக்கேட்பதில் தவறில்லையென, இங்குவந்த வெளிநாட்டவருக்கு எடுத்துக் கூறினேம். அவர்கள் எமது பிரச்னையை பி. பி. ஸியில் சில தினங்களுக்கு முன் அறிவித்துள்ளார்கள். எனவே எமது முப்பெரும் தலைவர்கள் எமக்கு விட்டுச்சென்ற லட்சியங்களை அடைய எந்தத் தடைவரினும் தயங்கோம்"

திரு. மு.சிவசிதம்பரம் உரையாற்றுகையில், "தந்தை செல்வா உயிருடன் இருக்கும் போது, நான் இன்னும் சில ஆண்டுகள் உயிருடன் இருப்பேன் என்றும், அதற்குள் தமிழ் ஈழம் மலருமெனக் கூறினர். ஆனல் அவரை விதி சதி செய்திட்டாலும், அவர் வழியில் நாம் தமிழ்ஈழம்பெறுவோம்."

"அமரர் ஜி. ஜி. ஒற்றையாட்சி முறையில் பிரச்னைகளைத் தீர்க்கலாமென நம்பியிருந்தாலும், கிடைத்த சலுகைகளைக்கூட சிங்கள மக்களை ஏமாற்றித்தான் பெற்றார். தமிழ்ப்பகுதிகளில் மூன்று தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு எத்தனையோ முறைகளை அவர் கையாண்டுதான் பெற்றார் பின்னர் ஒற்றையாட்சி முறையில் நம்பிக்கையற்று தமிழினத்தில் நமது ஒற்றுமை கண்டு தமிழ் ஈழத்தைப் பெற ஒன்றுபட்டார்".

தலைவர் டி. எஸ். கே. வனசிங்க பேசுகையில், தந்தை செல்வாதான் "அரசியல் அயோக்கியர்களின் புகலிடம்" என்ற கொள்கையை மாற்றுவித்த மகான். இன்று தமிழினத்துக்கு ஏற்பட்ட இன்னல்களின் மத்தியில் நாம் எமது மொழியை, கலையை, கலாச்சாரத்தைப்பேண, தமிழர்விடுதலைக் கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பை ஏற்படுத்தவேண்டுமென்றார்.

யாழ்.மாவட்ட இ.த.ஆ.ச. தலைவர் திரு. தி. நடராசா பேசுகையில், "தமிழினம் வரலாற்றுப் புகழ் கொண்ட இனம், வாழ்ந்த இனம், இன்று அவனது வரலாறுகள் பாட நூல்களில் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. இதை ஆசிரியர்கள் நன்குணர்ந்து, எமதுஎதிர் காலச்சந்ததியினருக்கு போதிக்கவேண்டிய கடமை ஆசிரியருடையது என்பதனை மறக்கக் கூடாதென்றார்.

திருமதி மோகனம்பிகை கணேசன், திருமதிமங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திருவாளர்கள் மு. பாலசுப்பிரமணியம், அ. பொன்னம்பலம், சி. சிவபாலசிங்கம் ந. பாலசுப்பிரமணியம் உட்படப்பலர் உரையாற்றினர்.

(கெ)

## 'வட்ட மேசைமாநாடு மூலமே தமிழர் பிரச்னையைத் தீர்க்கலாம்'

### குமார் பொன்னம்பலம் நம்பிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

"வட்டமேசை மாநாடு மூலம்தான் தமிழர்களது பிரச்னையைத் தீர்க்க முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்."

இவ்வாறு யாழ்ப்பாணம் தொகுதி சுயேச்சை வேட்பாளரும் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பாஷையூரில் அண்ணுவியார் இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், "இவ்வளவு காலமும் எங்களுடைய தலைவர்கள் ஆட்சிக்கு வரும் சிங்களக் கட்சிகளுடன் ஒப்பந்தம் செய்து பிரச்னையைத் தீர்க்க முனைந்தார்கள். ஆனல் சிங்களக் கட்சிகளோ தங்களது பலவீன நிலையில் தான் தமிழர்களோடு ஒப்பந்தங்கள் செய்ய முன்வந்தன. பலவீனமான கட்சியுடன் தமிழ்த் தலைவர்கள் ஒப்பந்தம் செய்யும்போது அதனை மற்றைய சிங்களக் கட்சிகள் எதிர்ப்பது இயல்பு.

அதனல்தான் வட்டமேசை மாநாடு ஒன்றின்மூலம் தமிழர் பிரச்னைத் தீர்வுக்கு ஒரு வழி பிறக்கும் என்று நான் கருதுகின்றேன் என்றார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"ஒரு கட்சியுடன் ஒப்பந்தம் செய்தால் இவ்வளவுகாலமும் எப்படி ஒப்பந்தங்கள் கிழிபட்டனவோ அதுபோலவே ஆகும். வட்டமேசை மாநாடென்றால் இலங்கையின் எல்லாக் கட்சிகளும் அம் மாநாட்டிற்குப் பிரதிநிதிகளை அனுப்பும் அவர்கள் தங்கள் கொள்கைகளைக் கூறுவார்கள். ஏதோ ஒரு முடிவுக்கு அந்த மாநாடு வரும். அப்போது அம் முடிவை ஆட்சியிலிருக்கும் கட்சி அமுல் படுத்தக்கூடியதாக இருக்கும். ஏனைய கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டா. ஏனென்றால் அவர்களும் வட்டமேசை மாநாட்டுத் தீர்ப்புக்கு ஒப்புதலாக அதில் கையொப்பம் இட்டிருப்பார்கள்.

அவ்வாறு அந்த வட்ட மேசை மாநாட்டில் தமிழர் பிரச்னையைத் தீர்க்க கட்சிகள் ஒருப்படவில்லையானல் சிங்களவரும் உணர்ந்து தமிழருக்குத் தங்களது சுயநிர்ணய உரிமையை வழங்க ஒத்துழைக்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வரலாம். ஏனைய சில கட்சிகளும் இப்படி ஒரு நிலைக்கு வரலாம்.

இந்தத் தேர்தல் தனி நாடு வேண்டுமா? வேண்டாமா? என்று நிர்ணயிக்கும் தேர்தல். சர்வசன வாக்கெடுப்பு ஆக நடைபெறும் தேர்தல் என்று கூட்டணியினர் கூறுகின்றனர். நான் சொல்லுகின்றேன் இது சர்வசன வாக்கெடுப்பல்ல.

சர்வசன வாக்கெடுப்பு என்ற சொல்லைப் பிரயோகிக்கும் போதுகூட இந்த நாட்டில் வாழுகின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் ஆகிய ஏனைய இனங்களது அனுமதியைப் பெறுவதாகத்தான் இருக்கும். தனியே இலங்கையின் வடக்கு கிழக்கு மாகா

(5-ம் பக்கம் பார்க்க)

## துரையப்பா ஆதரவாளர் யார் பக்கம்?

### 22-ம் திகதி தெரியுமாம்

யாழ்ப்பாணம், திங்கள்

"சிலர் இந்தப் பகுதியிலே வந்து அமரர் அல்பிரட் துரையப்பாவின் ஆதரவாளர்கள் தங்கள் பக்கமே என்று கூறிச் சென்றிருக்கிறார்கள். எதிர் வரும் 22ம் திகதி யாரை அமரர் துரையப்பாவின் ஆதரவாளர்கள் ஆதரித்தார்களென்பது புரிந்து விடும்"

இவ்வாறு யாழ்ப்பாணம் தொகுதி சுயேச்சை வேட்பாளராகிய டாக்டர் ஏ. எல். ஏபிரகாமின் தேர்தல் காரியாலயத் திறப்புவிழாக் கூட்டத்தில் திரு. எஸ். பாலசிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாண்டியன் தாழ்வில் நடைபெற்ற இக்கூட்டத்திற்குத் திரு. ஏ. பெனடிற் தலைமை தாங்கினர்.

திரு. பாலசிங்கம் தொடர்ந்து பேசுகையில்; "ஏன் டாக்டர் ஏபிரகாமை அமரர் துரையப்பாவின் ஆதரவாளர்கள் ஆதரிக்க வேண்டுமென்றால், அவர் வல்லவர், நல்லவர் ஏழைகளின் நண்பன். துரையப்பாவைப் போலவே இரவு, பகல், எந்த வேளையிலும் உங்களுக்காகச் சேவைசெய்யக் காத்திருப்பவர். அதனல்தான் துரையப்பாவின் உடன்பிறப்பான செல்வராஜாவும் டாக்டர் ஏபிரகாமை இந்தத் தேர்தலிலே ஆதரிக்கின்றார்.

"திரு.ஏபிரகாம் வட்டாரங்கள் தோறும் செயற்குழுக்களை அமைத்து அவ்வப்பகுதி மக்க

(5ம் பக்கம் பார்க்க)

# விவசாயிகள், ஏழைகளுக்கு சிரமமின்றி கடன்வசதி

## தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை, ஜூலை 10

''விவசாயிகளுக்கும் ஏழைகளுக்கும் கடன்வசதி அளிப்பதில் உள்ள சிரமங்கள் நீக்கப்படும்'' என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

சட்ட மேலவையில் உரையாற்றிய முதலமைச்சர் ''மாநிலத்தின் பொதுவான நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டு அரசு இதுபற்றி நடவடிக்கைமேற்கொள்ளும்'' என்று சொன்னார்.

''அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக கடன்வசதி பெறுவதற்கு மத்திய அரசுடன் தொடர்புகொண்டு அந்நிலை சாத்தியமானதுதானா என்பது பரிசீலிக்கப்படும்'' என்றும் திரு. எம். ஜி. ஆர். சொன்னார்.

''நடப்பாண்டின வேளாண்மையில் குருவைநெல் சாகுபடி பாதிக்கப்படாமலிருக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்'' என்று அவர் கூறினார்.

### நிராகரிப்பு

காவிரி நீர் தொடர்பாக ஒத்திவைப்பு பிரேரணை கொண்டு வருவது விரும்பத்தக்கதுஎன தி. மு க. உறுப்பினர் திரு. கோ. சி. மணி கூறினார்.

ஆனால் இக் கோரிக்கை மேலவைத் துணைத்தலைவரால் நிராகரிக்கப்பட்டது. (உ)

---

# கானாவில் கடும் அரசியல் நெருக்கடி

லண்டன், ஜூலை 10

கானாவில் இராணுவ உத்தியோகத்தர்களின் லீவுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

கானாவில் பாரதூரமான அரசியல் நெருக்கடி நிலவிருவதாக அக்ரா செய்திகள் தெரிவிக்கின்றன.

கானாவின் இராணுவ ஆட்சியைக் கவிழ்க்க வல்லரசு ஒன்று முயன்று வருவதாகவும் அச்செய்திகள் மேலும் கூறின. (உ)

---

# யூகோ. ஜனாதிபதி ஆகஸ்டில் ரஷ்யா செல்கிறார்

பெல்கிரேட், ஜூலை 10

யூகோஸ்லேவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ ஆகஸ்ட் மாதம் 11-ம் திகதி உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ரஷ்யா செல்லவிருக்கிறார்.

அவர் அந்நாட்டுத்தலைவர்களுடன் அணிசேரக் கொள்கை ம. கி. விவகாரம் உட்பட பொதுவானபல பிரச்னைகள் குறித்து பேச்சு வார்த்தைகள் நடத்துவார் எனத் தெரிகிறது (உ)

---

## புராதன விலங்கின எலும்புக்கூடு

லீமா, ஜூலை 10

அரிகுப்பா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தொல் பொருளியலாளர் குழுவொன்று கி. மு. 10000—12000ம் ஆண்டு காலத்தில் வாழ்ந்தது எனக்கருதப்படும் புராதன விலங்கொன்றின் எலும்புக்கூட்டினைக் கண்டுபிடித்துள்ளனர்.

ஆறுமீட்டர் நீளமுள்ள இந்த எலும்புக்கூடு ராட்சத காண்டாமிருகத்தையொத்த ஒரு மிருகத்தினதாக இருக்கவேண்டுமெனவும், இன்றைய பெருவின் பிராந்தியத்தில் வாழ்ந்திருக்கவேண்டும் என்றும் தொல்பொருளியலாளர்கள் கருதுகின்றனர்.

மிகப் பெறுமதிவாய்ந்த இந்த எலும்புக்கூடு பெருவின் வெப்பநீர் அருவிக் குன்றினுக்கு அருகே கண்டுபிடிக்கப்பட்டது. (உ)

---

# றொடீஷிய பிரச்னை: சமரஸ முயற்சியில்

## அமெரி-பிரிட்டிஷ் தலைவர்கள்

வாஷிங்டன், ஜூலை 10

றொடீஷியப் பிரச்னையைத் தீர்த்து வைக்கும் பொருட்டு அமெரிக்க பிரிட்டிஷ் தலைவர்கள் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் றொடீஷிய அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பேச்சு வார்த்தைகள் மூன்று மணித்தியாலங்கள் நீடித்தன.

றொடீஷியாவில் பெரும்பான்மை இனத்தவரான கறுப்பர் ஆட்சியை எவ்விதத்தில் அமைப்பது என்பது பேச்சு வார்த்தைகளின்போது ஆராயப்பட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன

றொடீஷிய அரசியல் தலைவர்களுடன பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்ட அமெரிக்க, பிரிட்டிஷ் தலைவர்கள் இன்று இதன் பலாபலன் குறித்து ஆராய்வதில் ஈடுபட்டனர். (உ)

---

பாகிஸ்தானில்

## அரசு தொடர்பான செய்தி வெளியிடுவதற்கு அனுமதி தேவை

இஸ்லாமாபாத், ஜூலை 10

அரசியல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென பாகிஸ்தான் இராணுவ தலைவர் ஜனுப் ஹக் கூறியுள்ளார்.

அதிகார மன்றங்கள், இராணுவச் சட்டங்கள் என்பன பற்றிய செய்திகளை பத்திரிகைகள் அரசின் அனுமதி பெற்றே வெளியிட வேண்டும் என்றும் அரசு பணித்துள்ளது. (உ)

---

''ஐ. நா. சபை

# வறிய நாடுகளுக்கு உதவவேண்டும்''

## பாப்பரசர் வலியுறுத்து

லண்டன், ஜூலை 10 பொதுச் செயலாளர் கலாநிதி ஐக்கிய நாடுகள் சபைப் வால்ட்ஹெய்ம் புனித பாப்பரசர் போலைச் சந்தித்து உரையாடினார்.

''வறிய நாடுகளுக்கு உதவுவதிலும் பசி, பட்டினியற்ற நிலையை உருவாக்குவதிலும் அக்கறை கொண்டவையாக ஐ.நா. சபையின் தீர்மானங்கள் அமைய வேண்டும்'' என்று பாப்பரசர் கலாநிதி வால்ட்ஹெய்மிடம் கேட்டுக் கொண்டார்.

45 நிமிடங்கள் இச் சந்திப்பு நீடித்தது. (உ)


ஹேகெம் லிமிடெட்

400, டீன்ஸ் வீதி,

கொழும்பு-10

BAYER

ஹேகெம் ஸ்தாபனத்தார் களால் தயாரித்து விநியோகிக்கப்படும் ப்பயர் (BAYER) விவசாய இரசாயனப் பொருட்களை யாழ். மாவட்டத்தில் விற்பதற்கு கீழ்க்காணும் நிலையங்கட்கு அனுமதி வழங்கியுள்ளாரென்பதை இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கிறோம் இந்நிலையங்கள் எமது விவசாய இரசாயனப் பொருட்களை கமக்காரர் அடையாள அட்டைவைத்திருப்போருக்குஎமது ஸ்தாபனம்நிர்ணயிக்கும் விலையில் விநியோகம் செய்வார்கள். கலப்பற்ற ப்பயர் (BAYER) விவசாய இரசாயனப் பொருட்களை இந்நிலையங்களில்தான் நம்பிக்கையாகப் பெற்றுக் கொள்ளலாம். எங்கள் நாசினிகள் விநியோகிக்கவென கீழ்க்குறிப்பிட்ட நிலையங்களே அவ்வப்பகுதிக்கு தற்சமயம் போதுமென எங்கள் அபிப்பிராயம்.

1. நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும், கிளைகளும்
2. நல்லூர் விவசாய விளைவுப் பெருக்கக்குழு
3. வேலணை ,, ,, ,,
4. தொல்புரம் ,, ,, ,,
5. கீரிமலை ,, ,, ,,
6. உடுவில் ,, ,, ,,
7. புத்தூர் ,, ,, ,,
8. அம்பன் ,, ,, ,,
9. கைதடி ,, ,, ,,
10. சாவகச்சேரி ,, ,, ,,
11. பளை ,, ,, ,,
12. கிளிநொச்சி ,, ,, ,,
13. பூநகரி ,, ,, ,,
14. துணுக்காய் ,, ,, ,,
15. வலி-கிழக்கு கூட்டுறவு வாழைப்பழ விற்பனவுச் சங்கம், நீர்வேலி.
16. விசுவமடு இளைஞர் விவசாயத்திட்ட கூட்டுறவுச் சங்கம்
17. திருவையாறு இளைஞர் விவசாயத்திட்ட கூட்டுறவுச் சங்கம்
18 றோயல்டிஸ்பென்சரி, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்
19. சாமுவேல் சன்ஸ், அண்ட் கொம்பனி லிமிட்டெட் யாழ்ப்பாணம்.
20 அக்றோதவாஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
21. உவாக்கர் சன்ஸ் லிமிட்டெட், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
22. பாம்கோ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
23. அக்றோ அருணாஸ், வேலணை.
24. பி. ஜேம்ஸ், ஊர்காவற்றுறை.
25. ராஜா ஹாட்வெயர், ஊர்காவற்றுறை.
26. பாம் நீட்ஸ், தொட்டிலடி, சங்கானை.
27. சிறி அம்பாள் ஸ்ரோஸ், வல்லைறோட், சங்கானை.
28. ஜோய்ஸ், பண்டத்தரிப்பு.
29. அந்தோனி ஹாட்வெயர், பண்டத்தரிப்பு.
30. லக்ஷ்மிநாராயன்ஸ் ஸ்ரோஸ், காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை.
31. லக்ஷ்மி நாதன்ஸ், காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை.
32. கிருஷ்ணாஸ், காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை.
33. புளோரு, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
34. ஆனந்த சைக்கிள் வோக்ஸ், காங்கேசன்துறை வீதி. சுன்னாகம்.
35. ஜெயறேடேர்ஸ், காங்கேசன்துறைவீதி, சுன்னாகம்.
36. குறாஸ் 13, புதுமாக்கெட், சுன்னாகம்.
37. கமக்காரர் மாளிகை, சுன்னாகம்.
38. பிள்ளையார் விவசாய சேவை. இணுவில்.
39. சிறி குமரன் ஸ்ரோஸ், கோண்டாவில்.
40. முருகன் ஸ்ரோஸ், புன்னாலைக்கட்டுவன் தெற்கு.
41. கந்தையா ஸ்ரோஸ், நவக்கிரி.
42. இராசையா ஸ்ரோஸ், அச்சுவேலி.
43. நாதன் ஸ்ரோஸ், அச்சுவேலி.
44. அக்றோ விலாஸ், இடைக்காடு, அச்சுவேலி.
45. சரஸ்வதி ஸ்ரோஸ், கம்பர்மலை, வல்வெட்டித்துறை.
46. திருமகள் புத்தகசாலை, நெல்லியடி.
47. மொடேண் பாம்கவுஸ், நெல்லியடி.
48. டயாஸ், கரணவாய்.
49. லீலாவதி ஸ்ரோஸ், கைதடி.
50. சோமசுந்தரம் அன்ட் கோ, சாவகச்சேரி.
51. முருகன் அரிசி ஆலை, சாவகச்சேரி.
52. காமதேனு, கொடிகாமம்.
53. கௌரி ஸ்ரோஸ், கொடிகாமம்.
54. கே. வி. நடராசா, கண்டி வீதி, எழுதுமட்டுவாள்.
55. சிவாஸ் விவசாய ஸ்ரோஸ், பரந்தன்.
56. மாயவன்ஸ், பரந்தன்.
57. பரந்தன் ஹாட்வெயர், பரந்தன்.
58. யாழ்கோப்பரேஷன், பரந்தன்.
59. அம்பிகா ஸ்ரோஸ், கிளிநொச்சி.
60. அக்றோ றேட்ஸ், கண்டிறோட், கிளிநொச்சி.
61. ராஜா கோப்பரேஷன், கிளிநொச்சி.
62. கஜநிதி ஸ்ரோஸ், கிளிநொச்சி.
63. சாமுவேல் சன்ஸ் அன்ட் கோ, கிளிநொச்சி
64. ஐயனார் றேடேர்ஸ், கிளிநொச்சி.
65. அக்றோ றேட்ஸ், முல்லைத்தீவு றோட்டு, விசுவமடு.

மு. க.;- இவைதவிர்ந்த வேறிடங்களில் வாங்கி ஏமாறுதீர்கள். நம்பிக்கை வாய்ந்த ப்பயர் (BAYER) இரசாயனப் பொருட்களைப் பாவித்து, உங்கள் பயிர்களைப் பாதுகாத்து, நற்பயன் அடைவீர்களாக.

க. நா. ஜெயசிலன்,
[ஹேகெம் ஸ்தாபன வடபிராந்திய தொழில்நுட்ப ஆலோசகர்]

''ஈஸ்வர இல்லம்'',
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 6629

# "தமிழர் கௌரவம் பேண கூட்டணிக்கு வாக்களித்தல் கடமை"

## யாழ். பெற்ருேர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், திங்கட்கிழமை

"தமிழ் பேசும் மக்களது மானத்தையும் கௌரவத்தையும் பேணுவதற்கு தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத் தமது வாக்குகளை அளிப்பதுதான் ஒரே வழி."

இவ்வாறு யாழ். பெற்ருேர் சங்கம் தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இச்சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் திரு. சி. பொன்னையா விடுத்துள்ள வேண்டுகோளில் கூறியுள்ளதாவது:-

சிங்களவர்களும் தமிழர்களும் இணைந்து வாழ்வது தான் நல்ல வழியென்று பல வருடங்களாக வலியுறுத்திய தமிழர்களும் இன்று பிரிந்து வாழ்வதுதான் இந்நாட்டில் தமிழர் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ்வதைத் தவிர்க்கக் கூடிய வழியென்று கருதுகின்றனர்.

அந்நியர் ஆட்சியில் சுமார் 450 வருடகாலமாக சிங்களவர்களும் தமிழர்களும் அடிமை வாழ்வையே வாழ்ந்து வந்தார்கள். 1505-ல் போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்ற முன்பு சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இரண்டு இராச்சியங்கள் இருந்தன. அந்நியர் ஆட்சி முடிந்து சுதந்திரம் வரும்போது தமிழர்களும் தமது முன்பிருந்த அரசு உரிமையைப் பெறுவதுதான் நியாயம். ஆதலினுலேதான் தமிழ் பேசும் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரிக்க வேண்டுமென யாழ். பெற்ருேர் சங்கம் வலியுறுத்துகிறது.

எமது சுதந்திரத்தையும், அடிப்படை உரிமைகளையும், நிலம் புலம், பாரம்பரியத்தையும் பெற்றுக்காக்க ஒற்றுமை வேண்டுமென்றும் தமிழ்ப் பேசும் மக்கள் எல்லோரும் தங்கள் உய்வுக்காக தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே தமது வாக்குகளை அளிப்பது தலையாய கடமையாகும் என்றும் யாழ்.பெற்ருேர் சங்கம் கருதுகிறது." (இ)

## "சி. பா. தமிழர் பிரச்னையை கூட்டணி ஒன்றே தீர்க்கும்"

— கவிஞர் காரை. சுந்தரம்பிள்ளை

காரைநகர், ஞாயிறு

'சிறுபான்மைத் தமிழர்களுடைய சகல பிரச்னைகளையும் தீர்த்துவைக்கக்கூடிய ஒரேயொரு இயக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியே வேறுஎந்த சிங்களக்கட்சியாலும் இதனைத் தீர்த்துவைக்கமுடியாது'

காரைநகரில் வட்டுக்கோட்டைத் தொகுதிக் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசுவை ஆதரித்து நடாத்தப்பட்ட தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசிய கவிஞர் காரை. சுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. நா. கந்தையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'பெரும்பான்மைத் தமிழர்களின் ஆதரவு இல்லாமல் ஒருபோதும் சிறுபான்மைத் தமிழர் வாழமுடியாது. சிறுபான்மைத் தமிழரும் பெரும்பான்மைத் தமிழரும் ஒன்று சேர்ந்து பிறருக்கு நமது ஐக்கியத்தைக்காட்டவேண்டியது. உடுப்பிட்டித் தொகுதியிலே தான். அங்கு சிறுபான்மைத் தமிழர் சார்பில் போட்டியிடும் திரு. இராஜலிங்கத்தை பல்லாயிரக்கணக்கான அதிகப்படியான வாக்குகளால் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தெரிவுசெய்யவேண்டும். இந்த முடிவை விசேஷமாக உலக நாடுகளில் உள்ள சகல தமிழ் மக்களும் எதிர்பார்த்தவண்ணம் இருக்கிறுர்கள்.

'நம்பிக்கெட்ட இனம் தமிழினம். பெருந்தன்மை என்ற பெயரால் சுதந்திரத்திற்குப் பின் தமிழினம் சகல உரிமைகளையும் படிப்படியாக இழந்துவிட்டது' சகல அரசியல் கட்சிகளும்எம்மை இவ்வளவு காலமும்ஏமாற்றிவிட்டன. ஆகவே இனிமேலாவது நாம் நமது சொந்தக் கால்களில் நிற்க வேண்டும். இதற்கு ஒரேயொரு வழி தனித் தமிழ்ஈழம் அமைப்பதேயாகும்.

வட்டுக்கோட்டை வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசு பேசுகையில் நாகரீகமும் சிறப்புமுடைய தமிழினம் பலநாடுகளைக் கட்டியாண்ட வரலாற்றுச் சிறப்புடையது. நமது இனம் இன்று உலகில் அடிமை இனமாக இருப்பதை மானம் உள்ள எந்தத் தமிழ் மகனும் ஏற்றுக் கொள்ள மாட்டான். நாம் கடந்த 1957-ம்ஆண்டு முதல் தமிழினத்திற்காகப் போராடி வருகின்ருேம் எமது போராட்டத்தின் முக்கிய கட்டத்தில் இருக்கின்ருேம். இப்போராட்டத்தின் முடிவை இலங்கையில் உள்ள சகல தமிழ் மக்களும் எதிர்வரும் 21-ம் திகதி காட்டுவார்கள் என்றுகூறினுர். தமிழ் இளைஞர் பேரவையைச்சேர்ந்த திரு.புஷ்பராசா,புதுவைஆனந்தன்,திரு.அலோசியஸ் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். (அ)

## அ. எ. வி.சங்க புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 15 வது ஆண்டுக் கூட்டம் யாழ்.வை. எம் சி ஏ மண்டபத்தில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு.கிருஷ்ண பிள்ளை, (செயலகம்) உபதலைவர்கள்: திரு. நா. பாலசுப்பிரமணியம், (உதவி அ. அ. தெல்லிப்பளை) திரு சி சண்முகலிங்கம், (கிராமஅபிவிருத்தி) செயலாளர் திரு. சந்திரா ஸ்ரீபதி (செயலகம்) துணைச் செயலாளர் திரு. ந சிவசீலன் (செயலகம்) பொருளாளர் திருமதி. சுதந்திர பாலன் (கல்வி).

செயற்குழு உறுப்பினர்கள் திருவாளர்கள்: செ. கனகரத்தினம், (செயலகம்) செ. சின்னையா, (செயலகம்) சி. சுந்தரலிங்கம், (சமூகசேவை) த கனந்தஆபில், (கல்வி) த. திருச்செல்வம், (கல்வி) ஐ.சண்முகலிங்கம். (கல்வி) கு இராசநாயகம்.(கல்வி) க. பரஞ்சோதி, (தொழில்) த. வேலாயுதபிள்ளை, (மேல்நீதிமன்றம்) அ.வேதநாயகம். (சுகாதாரம்) ஐ. திருநாவுக்கரசு, (உள்ளூராட்சி) ச. நவரத்தினம் (தேர்தல்) விசுவலிங்கம் (நீதவான் மன்றம்) (கி-அ)

## நோயின் வேதனையால் தற்கொலை

யாழ்ப்பாணம், திங்கள்

நோயின் கொடுமை தாங்காமல் 60 வயது வயோதிப மாது நஞ்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இருபாலையைச் சேர்ந்த ச. சின்னம்மாவின் மரண விசாரணையில் மேற்கண்டவிபரம் தெரிய வந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினுர்.

இறந்தவர் 2 கிழமையாக வயிற்ருேட்டத்திஞல் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் சம்பவதினம் மயக்கமடைந்து விழுந்த பின் நச்சுதிராவக வாடை வீசியதாகவும் விசாரணையில் கூறப்பட்டது தற்கொலையெனத் தீர்பளிக்கப் பட்டது. (க)

## பண்டிதரை ஆதரிக்கத் தீர்மானம்

வேலணை, ஞாயிறு

ஊர்காவற்றுறை தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும் பண்டிதர் கா.பொ.இரத்தினத்தை ஆதரிப்பதென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க தீவகக்கிளையினர் தீர்மானித்துள்ளனர்.

வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெற்ற மேற்படி சங்கக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. (இ)

## நியமனம்



யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி கோபாலரத்தினம், யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர்களின் பிரிவுகளுக்கு விவாகப் பதிவாளராகவும், திருநெல்வேலி, அரியாலைப் பகுதிகளுக்கு பிறப்பு இறப்புப் பதிவாளராகவும், பதிவாளர் நாயகத்திஞல் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் நல்லூர் உப தபால் அதிபர் திரு. அருணசலம் கோபாலரத்தினத்தின் மனைவியாவார். திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியின் பழைய மாணவியான இவர் நல்லூரில் உள்ள பல சமூக சேவைநிலையங்கள்மூலம் சமூக சேவையாற்றி வருகின்ருர். (அ)

## பஸ்மோதி மரணம்

கடவத்த, ஞாயிறு

இ. போ. ச. பஸ் ஒன்றினுல் மோதப்பட்டு தள்ளுவண்டிக் காரர் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமாஞர்.

இச்சம்பவம் கடவத்தையில் நடைபெற்றது.

பிரேஸில் என்ற இவ்வண்டிக்காரர் தேங்காய் ஏற்றி வந்தாராம்.

சம்பவதினமிரவு காலஞ்சென்றவர் தம் வண்டியில் விளக்கு கொண்டுவரவில்லை என்று கைதாகியுள்ள பஸ் சாரதி பொலிசாருக்கு அளித்துள்ள வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். (உ)

## "கலாச்சார வளர்ச்சிக்குரிய கல்வித்திட்டம்"

### கல்விப்பணிப்பாளர் பாராட்டு

அனுராதபுரம், ஞாயிறு

"இசை, நடன, பேச்சு, மற்றும் கலை, கலாச்சார வளர்ச்சிக்குரிய கல்வித்திட்டத்தை எமது அரசாங்கம் வகுத்துள்ளமை பாராட்டத்தக்கது. இவ்வேளை - இவற்றிற்கான செயல் முறைகளை, இந்த விழாவில் காணக்கூடியது மிகவும் மகிழ்ச்சிக்குரியதொன்ருகும். விவேகானந்தருக்கு வருடா வருடம் விழாவெடுத்து வரும் இவ்வித்தியாலய மாணவர்களது இசை, நடன, நாடக, பேச்சுத்திறன்களை காண்கின்றபோது, வித்தியாலயத்தின் பரிபூரணத்துவத்தையும், மாணவர்களது திறனையும் நாம் அறியமுடிகின்றது. இது வித்தியாலயத்தின் அபிவிருத்திக்கும் மாணவர்களது உயர்ச்சிக்கும் நல்லதொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது."

சுவாமி விவேகானந்தர் நினைவுவிழா, அனுராதபுரம் விவேகானந்த தமிழ் மகாவித்தியாலயத்தில், அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெற்ற போது,உரையாற்றிய மேலதிக கல்விப் பணிப்பாளர், திரு. ஜெயசேகரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய மாணவிகள் செல்விகள் க.யசோதரா, லோரமணி, இ.இரஞ்சனி ஆகியோரின் திருமுறைப்பாடலுடன், ஆரம்பமாகிய இவ்விழாவின் போது, கல்விப் பணிப்பாளர் திரு. வின்சன் பண்டார நாயகா மங்கள விளக்கேற்றிச் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது.

"மாணவர்கள் தமது சிறுபராயத்திலிருந்தே, ஞானிகள், பேரறிவாளர்கள், தத்துவ மேதைகள் என்போருடைய சிறப்புக்களை, வரலாறுகளை மனதில் பதித்துக்கொளளத் தகுந்தவகையில், இன்று விவேகானந்தர்விழா நடைபெறுவது மிக மகிழ்ச்சிக்குரியதாகும். வருடாந்தப் பெருவிழாவாக, விவேகானந்தர் விழா அமைந்து, யாபேர்க்கும் சிறப்பைக் கொடுப்பதற்குக் காரணமான இவ்வித்தியாலயத்தை நாம் பாராட்டுவோமாக. வித்தியாலயத்தையும், பெற்ருேர்களையும், சமூகத்தையும் பரந்த ரீதியில்ஒன்றிணைக்கும் இவ்விழாவும் வித்தியாலயமும் மென்மேலும் சிறப்படைவதாகுக".

தலைமை வகித்த அதிபர், திரு. வி. சிவசுப்பிரமணியம் பேசுகையில், "மாணவர்களது திறமையை வெளிக் கொணர இவ்விழா வருடாந்த நிகழ்ச்சியாக இடம் பெற்றுவிட்டது. இது போன்ற விழாக்களுக்கும் வித்தியாலய வளர்ச்சிக்கும். பேராதரவும், ஒத்துழைப்பும் நல்கிவரும் பெற்ருேரையும் நாம்பாராட்ட வேண்டும்" என்ருர்.

மாணவர்களதுபேச்சு,இசை நடன நாடகநிகழ்ச்சிகளும், பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு.இ. சிவனேசனின் சிறப்புரையும், இவ் விழாவில் இடம்பெற்றன. மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு.ஜெயசேகரா பரிசு வழங்கினுர். (கா-ச)

உங்கள் விவசாய பயிர்களை பாதுகாத்து நீங்கிழைக்கும் பூச்சி பொடுக்களை இல்லாதொழிப்பது......



பக்ஸ்

அல்லும் பகலும் அயராதுழைத்து நீங்கள் உண்டு பண்ணிய விவசாயப் பயிர்களிலிருந்து மேலான சிறந்த பயன்பெற அழிவுண்டாக்கும் பூச்சி புழுக்களிலிருந்து அவற்றைப் பாதுகாருங்கள்.

மிளகாய்ச் செடிச் சுருள், அவரை, ஈரவெங்காயம், புகையிலை, காய்கறி, அன்னுசி முதலியவற்றிலிருந்து சிறந்த வருவாயைப் பெற பாவியுங்கள் சர்வதேச புகழ்பெற்ற — பக்ஸ்

சர்வதேச செவ்ருேன் கம்பெனியின்
இரசாயனத் தயாரிப்பு 'பக்ஸ் 30ப'
உற்பத்தியாளர்: 'மொணிடர் 600'

ஹரிசன்ஸ் அன்ட் குரொஸ்பீள்ட்
(கொழும்பு)
டார்லி ரோட், கொழும்பு —10.

**RIO** (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
AUDREY MURPHY
in
**Gun Fight At Comacoa Creek**

68-வது நாள்
**ராணி** (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
**நாளை நமதே**
(ஈஸ்டமன் கலர்)

மகத்தான 2-வது மாதம்
**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா
நடித்த
ஸ்ரீதரின் **வைரநெஞ்சம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**மனோகரா** [யாழ்ப்பாணம்]
சிவாஜி—பத்மினி
ஸ்ரீராம்
நடித்த
**கோடீஸ்வரன்**

வெகு விரைவில் வருகிறது
எம். ஜி. ஆர் — லதா நடித்த
**உழைக்கும் கரங்கள்**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
சிவ்ராம், கீதாஞ்சலி,
தர்மலிங்கம், ஸ்ரீதேவி
நடித்த
தினசரி 4 காட்சிகள்
ஜெயேந்திரா மூவீஸ்
**காத்திருப்பேன் உனக்காக**

65-வது தினம்
**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
போன்: 7180
தேவரின் **திருவருள்** (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

**REGAL** (JAFFNA) Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
The first class comedy sparkles with an excellent cast romance and a bevy of glorious girls.
FRANKIE HOWERD, DORA BRYAN
in
**"The Great St. Trinian's Train Robbery"**
Color, (Family Entertainment)

**சாந்தி** யாழ். நகர் போன்; 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
முத்துராமன் — கே. ஆர். விஜயா
சிவகுமார் — ஜெயசுதா
மேஜர் சுந்தரராஜன் — ஜெயசித்ரா
**தீர்க்க சுமங்கலி**
இது ஒரு கதையல்ல! கண்ணீர்க் காவியம்

**வெலிங்டன்** [யாழ். நகர்]
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
**பூம்புகார்**
15-ந் திகதி முதல் **தாய் இல்லாக் குழந்தை**

**லிடோ** போன்: 7693 (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி — ஜெமினி
**பந்தபாசம்**
12-7-77 முதல் **பத்தினித் தெய்வம்**


# "சிந்தனைத் தெளிவுடன் வாக்களிக்க வேண்டும்"

— சிவ. ஸ்ரீதரன்

யாழ்ப்பாணம், திங்கள்

"தமிழ் மக்கள் தமது எதிர்காலம் குறித்து பரந்த ரீதியில் சிந்தித்து செயலாற்ற வேண்டும்" என்று காங்கேசன்துறை தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் சட்டத்தரணி திரு. சிவ. ஸ்ரீதரன் தெல்லிப்பளையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கூறினார்.

திரு. எஸ். கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் "மொழி வெறிக்குப் பலியாகி தமிழ் மக்கள் சிந்தனைத் தெளிவை இழந்துவிடக்கூடாது. நிதானமாக, பரந்த ரீதியில் சிந்தித்து சேவைத்திறன் கொண்ட வேட்பாளர்களை அவர்களை சுயேச்சைகள் என்ற குறுகிய மனப்பான்மைக்கு இடமளிக்காமல் தெரிவு செய்யவேண்டும், நாடும், மக்களும் நலம்பெற வேண்டும். தமிழரின் தனித்துவம் பேணப்படவேண்டும் என்பதில் என் பங்கைச் செலுத்தியே தீருவேன்" என்றார். (உ)

## துரையப்பா...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

களது பிரச்னைகளையும் தீர்க்கத் திட்டம் தீட்டியுள்ளார். அவரின் விஞ்ஞாபனத்தில் மக்களுடைய தேவைகளனைத்தையும் தான் சேவையாக வழங்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளார் என்றார்"

செல்வி பத்மசேகர் இரத்தினம் பேசுகையில் "கூட்டணி என்று சொல்லிக்கொண்டு தனது கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கே சமப் பிரதிநிதித்துவம் கொடுக்காதவர்கள், எப்படி தமிழ் மக்களின் எல்லாச் சமூகத்தினருக்கும் சமத்துவம் அளிக்கப் போகின்றார்கள்" என்று கேட்டார். (கூ-உ)

## வட்டமேசை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ணங்களில் வாழும் மக்களது ஆதரவைப் பெறுவதின் மூலம் சர்வசன வாக்கெடுப்பு என்று சொல்ல முடியாது.

நாடு பிளவுபட்டு இரு நாடுகளாவதை இலங்கை மக்கள் அனைவருமா? அல்லது ஒரு சிறு பகுதியினர் மட்டுமா? நிர்ணயிப்பது என்பது முக்கியமான விஷயம். கூட்டணியினர் சர்வ சன வாக்கெடுப்பு என்று சொல்லுவதை நான் இன ஜன வாக்கெடுப்பு என்றுகூடச் சொல்ல மாட்டேன். ஏனென்றால் இன்று கூட்டணி வேட்பாளர்கள் 15 லட்சம் தமிழர்கள் வாழும் பகுதியில் தான் தங்களது வேட்பாளர்களை நிறுத்தியுள்ளார்கள். எப்படி, ஏனைய 20 லட்சம் மக்களது கருத்துக்களையும் அறியாமல் இதை இன ஜன வாக்கெடுப்பு என்றுவது சொல்ல முடியும்.

"இன்று தமிழ் இளைஞர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் தரப்படுத்தல் பிரச்னையை இரு முறைகளில் தீர்க்கலாம். ஒன்று, பாராளுமன்றத்தில் வற்புறுத்தி இத்திட்டத்தை நீக்கச் செய்வது; மற்றது பல்கலைக்கழக அனுமதியை கல்வி அமைச்சிடம் இருந்து எடுத்து பல்கலைக்கழக நிர்வாகத்திடம் ஒப்படைப்பது" திருவாளர்கள்: கே. கதிர்காமநாதன். தி. மகேந்திரராஜா, எஸ், சொல்வேந்தன், ஆர். ஈ. ஆனந்தராசா, சு. கிளமென்ட் ஆகியோரும் உரையாற்றினர். (கூ)



ஈழத்து பண்ணிசைக் கலாநிதி நாச்சிமார்கோவிலடி எஸ் கே. சிவபாலனின் பண்ணிசைக் கச்சேரி தமிழகத்தில் நடைபெறவிருக்கிறது. திரு. சிவபாலன் பிரபல பாடகர் எம். எம். தண்டபாணிதேசிகரின் நான்காவது ஆண்டு நினைவுவிழாவில் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்துவார். சென்னை தமிழிசைச் சங்கத்தின் அழைப்பின் பேரில் செல்லும் இவர், இவ்வாரம் தமிழகம் பயணமாவார்.

## இப்படி ஒரு சவால்

யாழ்ப்பாணம், திங்கள்

கொக்குவில் மந்திப்புலம் காந்திஜி சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் அப்புக்குட்டி தலைமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நல்லூர் தொகுதி சுயேச்சை வேட்பாளர் இராஜஇராஜேஸ்வரன் தங்கராசா பேசிக்கொண்டிருக்கும் போது ஒரு அரசியல் கட்சியின் ஆதரவாளர்கள் சிலர் "சிறுபான்மைத் தமிழர் வீட்டில் இருந்து கொண்டு வரும் சாப்பாட்டை தந்தால் சாப்பிடத் தயாரா?" என்றுகேட்டனர். "இங்கு திரண்டிருந்த மக்களின் மத்தியில் சாப்பிடத்தயார்; ஆனால் உங்கள் தலைவரையும் இங்கே கொண்டு வந்து நீங்கள் சாப்பிட வைக்கத் தயாரா?" என்று அவர் கேட்டபோது, மக்கள் கரகோஷம் புரிந்தார்கள். ஆனால் சாப்பாட்டைக் கொண்டு வராமல் கூறியவர் நிற்கவே திரு. இராஜஇராஜேஸ்வரன் தங்கராசா "நான் 5 வருடமாக திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் ஒவ்வொரு போயா தினமும் சிறுபான்மைத் தமிழர்களுடன் பங்குபற்றியுள்ளேன். இந்தச் சவாலை ஏற்பதற்கு ஒருவித ஆட்சேபனையும் இல்லை" என்று கூறினார்.

## இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

செங்குந்தா இந்துக் கல்லூரி பெற்றோர் ஆசிரிய சங்கப் பொதுக் கூட்டம் இன்று பிற்பகல்கல்லூரி அதிபர் திரு. வ. மகாதேவா தலைமையில் நடைபெற விருக்கிறது.

நடப்புவருட நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு இக் கூட்டத்தில் இடம் பெறும். (கா-அ)


**வெஸ்லி** [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
**கணவன்**

**புலோலி சினிமாஸ்** (பருத்தித்துறை)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சௌகார் ஜானகி
**மோட்டார் சுந்தரம் பிள்ளை**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவகுமார் - ஜெயசுதா
**பட்டிக்காட்டு ராஜா**



## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள E N-1000 தொடர் இலக்கம் கொண்ட Austin-Cambride (A/50) விற்பனைக்கு உண்டு. தரகுகள் கொடுக்கப்படமாட்டாது. விபரங்கட்கு K. நித்தியானந்தன், 33 பலாலி வீதி, யாழ்ப்பாணம். 6631

பயிர் பாதுகாப்புக்கு சிறந்த நீமாரொக்ஸ் கிருமிநாசினியை வாங்கி உபயோகியுங்கள். மில்க்வைற்சவர்க்காரத்தொழிலகம், யாழ்ப்பாணம். 6615

### தேவை

தையல் வேலைகளில் அனுபவமும் நிலையத்தை நடத்தக்கூடிய பெண் ஊழியர் உடனே தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். தங்க இடவசதியும் அளிக்கப்படும். மனேஜர், கே.எஸ்.எம். இன்டஸ்றீஸ், தையல் நிலையம், வலந்தலை, காரைநகர். 6632

### பயிற்சி

மத்திய கிழக்கு நாடுகளிலும் கப்பல்களிலும் வேலைகள் பெற ஏற்ற பயிற்சிகள். கல்வி அமைச்சினால் தொழிற்பயிற்சி நிலையமென அங்கீகாரம் பெற்ற இலங்கையின் ஒரேபயிற்சி நிலையம். NIET, வெல்டிங் (Electric and Gas), இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor), Motor Mechanism, City and Guilds (Electrical) P.M.G. (Special) Certificate பகல் — இரவு வகுப்புகள். National Institutes, மைற் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6610

6 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 01-08-1977ல் ஆரம்பமாகவுள்ளது. நிச்சயமான வேலை வாய்ப்பை தரக்கூடிய விதத்தில் பயிற்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நீங்கள் பல வழிகளில் பயனடைவீர்கள் என்பதை நாம் உறுதிப்படுத்துகின்றோம். அதிபர், இன்ஸ்டிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/B ஸ்ரான்லி வீதி, மொம்சாக் கட்டிடம், யாழ்ப்பாணம். 6630

**நல்லூர்**
**ப. நோ. கூ. சங்கம்**
**கேள்விப் பத்திரம்**
**வெற்றுச்சாக்கு**

நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தில் 7500 வெற்றுச்சாக்குகள் வரை விற்பனைக்குண்டு. கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்திக் கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளவேண்டும். கேள்விப் பத்திரங்கள் 15-7-77 பிற்பகல் 3-00 மணி வரை வழங்கப்படும். 20-7-77-ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகக் கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

பொது முகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.
6627

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

ஈழநாடு
EELANADU

நல்லூர் ப. நோ. கூ. சங்க

# ஊழியர் தாக்குதல்:

## நடவடிக்கைஎடுக்ககோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள் "நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் 3ம் கிளையைச் சேர்ந்த விற்பனைப்பிரதிநிதி, வெளியார் ஒருவரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கவும்."

நல்லூர் ப.நோ.கூ.சங்க உப-தலைவர் திரு.கே.வர்ணகுலசிங்கம், உதவி கூட்டுறவு ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: இம்மாதம் 8ம் தேதி பிற்பகல் 4-30 மணிக்கு நடந்த இச்சம்பவம் பற்றி, ஆனைக்கோட்டை பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளதுடன், சங்க பொது முகாமையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தையிட்டு உடன் நடவடிக்கை எடுக்கத் தவறினுல், மற்ற உத்தியோகத்தர்களுக்கும் எதுவித பாதுகாப்பும் இருக்காது என அஞ்சுகிறேன். (க-இ)

# அடையாள வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், திங்கள் அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்கத்தின் யாழ்.கிளையும், அ இ.அ பாடசாலை கல்வி நிறுவனங்கள்சங்க யாழ் கிளையும் நடத்தப்படவிருந்த பாடசாலை ஊழியர் வேலை நிறுத்தம் இருமாத காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சங்கப் பிரதிநிதிகளும் யாழ். கல்வி அதிபதியும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து இம்முடிவு எடுக்கப்பட்டது.

சங்கம் சமர்ப்பித்த கோரிக்கைகள் இருமாதகாலத்திற்குள் தீர்த்து வைப்பதாக யாழ். கல்வித்திணைக்கள அதிபதி வாக்குறுதியளித்ததன் பேரில் இம்முடிவு எடுக்கப்பட்டதாக சங்கக்காரியதரிசி திரு. க. நவரத்தினம் தெரிவித்தார்.

இரண்டு சங்கங்களின் சார்பாகவும், க. மாணிக்கவாசகர், க. நவரத்தினம், அ. குலசேகரம், அ. சண்முகம் ஆகியோர் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். (உ)

# பஸ் விபத்தில் பலியான இந்தஇளைஞர் யார்?

யாழ்ப்பாணம், திங்கள் இ. போ. ச. பஸ் ஒன்றினுல் மோதப்பட்டு சைக்கிளில் வந்த இனந்தெரியாத இளைஞர் ஒருவர் மரணமானுர். இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 9 மணியளவில் திருநெல்வேலிச் சந்திக்கும் கோண்டாவில் சந்திக்கும் இடையில் நிகழ்ந்தது.

அடையாளம் காணப்படும் பொருட்டு இவரது சடலம் யாழ். பெரியாஸ்பத்திரி சவச்சாலையில்வைக்கப்பட்டுள்ளது.

கறுப்பு நிறமான இவருக்குச் சுமார் 22 வயது இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

5 அடி 3அங்குல உயரமான இவர் தமிழ் இளைஞர் என்று நம்பப்படுவதாகவும் தலைமுடி வெட்டி ஒருபக்கமாக வாரிவிட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

நீலநிறஅரைக் காற்சட்டையும் சிவப்பு நிற ஷேர்ட்டும் அணிந்து காணப்படும் இவரது உறவினர்களை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கோப்பாய்ப் பொலிசார் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

சார்ஜன்ட் ஐயாத்துரை இவ்விபத்து பற்றி விசாரணை புரிந்து வருகிருர்.

பஸ் சாரதி காவலில் வைக்கப்பட்டுள்ளார். (உ)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை

பாக்கியலெட்சுயின் அருமைக்கணவரும் திலகவதி, பி. ரி. அரசன் (மட்டக்களப்பு) ஆகியோரின் சிறிய தந்தையும் சிவானந்தன் (மத்திய வங்கி), சந்திரா ஆகியோரின் மாமனுரும் ஆவார் அன்னுரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக இல. 4, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, இல்லத்திலிருந்து இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 6633

## மரண அறிவித்தல்

### நாகமணி பொன்னுத்துரை

நாகமணி பொன்னுத்துரை (வாட் பரிசாரகர் அரசினர் வைத்தியசாலை-தெல்லிப்பளை) காலமாகி விட்டார். இவர் பூமணியின் அன்புக்கணவரும், ரவீந்திரன், முரளிதரன், கைளசல்யா, பிரபாகரன், கங்காதரன், யசோதரா ஆகியோரின் அன்புத்தந்தையும், செல்லத்துரையின் (சுங்க இலாகா) சகோதரரும் ஆவார். பூதவுடல் இன்று (11-7-77) மாலை 3-30 மணிக்கு பெருமாள் கோவிலடி இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்கு வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 6634

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரல் யாழ்ப்பாணம் வெண்கோவில் மேலைவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 189 Registered as News paper in Sri Lanka.

## யாருடையது?

யாழ்ப்பாணம், திங்கள். மூன்று முக்கிய திறப்புக்களைக்கொண்ட தோல் 'பேர்ஸ்' ஒன்று மல்லாகம் சந்தியில் இ.போ.ச. ஊழியர் ஒருவரினுல் கண்டெடுக்கப்பட்டு மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு.வி. பொன்னம்பலத்திடம் கொடுத்து அவர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.


• • •

யாழ். கே. கே. எஸ். வீதியில் கொக்குவிலைச் சேர்ந்த ஸ்ரீகாந்தா என்பவரால் கண்டெடுக்கப்பட்ட யாழ். மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைச்சேர்ந்த 5 கூப்பன்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## 'பிக்பாக்கட்'

யாழ்ப்பாணம், திங்கள் யாழ். நகரில் விவசாயக்கிருமி நாசினி வாங்குவதற்காக கியூவில் நின்ற ஒருவரிடமிருந்து 100 ரூபா பணமும் அறிமுக அட்டையும், 'பிக்பாக்கட்' அடிக்கப்பட்டுள்ளது.

ஆவரங்காலைச்சேர்ந்த வி. தியாகராஜா என்பவரிடம் இருந்தேநேற்று முன்தினம் பிக்பாக்கட் அடிக்கப்பட்டுள்ளது. (இ)



வேலர்;- என்ன எங்கடை வெறிக்குட்டி விக்கிரி கையிலை புக்கை கட்டிக்கொண்டு திரியுது?

மயிலர்:- மதிலில ஒட்டியிருந்த எதிர்க்கட்சிவேட்பாளரின் படத்துக்கு கையாலை ஒரு பொக்ஸிங் விட்டுது... கை முறுஞ்சு போச்சுது!

மணியர்:- உந்த புள்ளடி போடுற பொன்னுனை கையை இந்த நேரம் பூமாதிரி பாதுகாக்க வேணும்.

— சுந்தர்.

# மானநஷ்டவழக்கு

## சந்திரகாசன் தொடருவாராம்

யாழ்ப்பாணம், திங்கள் "நான் தேர்தலில் போட்டியிடாமல் விட்டது நீதிமன்றத்தில் நான் குற்றவாளியாகக் காணப்பட்டமையினுலேயே என்று திரு. குமார் பொன்னம்பலம் அப்பட்டமான பொய் ஒன்றைக் கூறியிருக்கின்ருர். இதற்காக நான் திரு. குமார் பொன்னம்பலத்தின்மீது மான நஷ்டவழக்கு வெகுவிரைவில் தாக்கல் செய்வேன்".

இவ்வாறு திரு. செ. சந்திரகாசன் இராசாவின்தோட்டத்தில் யாழ்ப்பாணத் தொகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர் திரு.வெற்றிவேலு யோகேஸ்வரனை ஆதரித்து நிகழ்ந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர். திரு. தர்மரத்தினம் தலைமையில் நிகழ்ந்த இக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

### மூன்றுமுறை கைதானேன்!

"நான் மூன்றுமுறை பொலிசாரால் கைது செய்யப்பட்டேன். திருமலையில் அத்துமீறிக்குடியேறியிருந்தவர்களிடமிருந்து எமது மரபுவழித் தாயகத்தைக் காப்பாற்ற முனைந்த போது ஒருமுறை கைது செய்யப்பட்டேன். 1961ம் ஆண்டு தமிழினம் சாத்வீகப்போரில் ஈடுபட்டிருக்கையில் துண்டுப் பிரசுரம் விநியோகித்ததாக என்னைக் கைதுசெய்து ஒரு நாள் முழுவதும் என்னைப் பொலிசார் அடித்துதைத்தனர். 61ம் ஆண்டில் நான் கைக்குண்டு வைத்திருந்தேன் என என்னை 3ம் முறையாகக் கைதுசெய்தனர். நீதிமன்றத்தில் அது வெறும் சீனவெடி எனத் தெரிவிக்கப்பட்டு நான் விடுதலையானேன். மூன்று முறையும் நான் குற்றவாளி அல்ல என விடுதலை செய்யப்பட்டேன். உண்மை இவ்வாறிருக்க திரு. குமார் பொன்னம்பலம் என் மீது என் மானத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் பிரசாரம்செய்து வருகிருர். எனவேதான் நான் அவர் மீது மானநஷ்டஈடு கோரி வழக்குத் தொடரப் போகின்றேன். அதில் நிச்சயம் நீதி வெற்றிபெறும். இதன் மூலம் எனக்குக் கிடைக்கும் பணத்தை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்குவேன்."

"இனிமேலும் நான் கைது செய்யப்பட்டு குற்றவாளியாக எப்போதாவது தண்டிக்கப்படுவதாக இருந்தால் அது நிச்சயம் தமிழ் ஈழ விடுதலைக்காகவே இருக்கும்."

சட்டத்தரணி கரிகாலன் பேசுகையில் "நேர்முகப் பரீட்சை வைத்துத் தகுதியுடையவர்களுக்கே அபேட்சகர் நியமனம் வழங்கப்பட்டது" என்ருர்.

### கூட்டணி இளைஞர் வன்செயலில் இறங்கார்

தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. கிருஷ்ணசாமி பேசுகையில் "எதிரணியினர் வன்முறைச் செயல்களைத் திரைமறைவில் தூண்டிவிட்டு பின்னர் அதனை தமிழ் இளைஞர் பேரவையினர் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் செய்வதாகக் கதைகட்டுகின்றனர். வெற்றியை நோக்கி வீறு நடையிடும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இச்செயல்களை ஒருபோதும் செய்யமாட்டார்களென மக்களுக்கு நன்கு தெரியும்" என்ருர். (கி-அ)

# குழந்தைப்பேறில்லாத கவலையில் இளம் பெண் தற்கொலை

யாழ்ப்பாணம், திங்கள் பிள்ளைப்பேறு இல்லையே என்ற மனக்கவலையினுல் நச்சுத் திராவகம் அருந்தி இளம் மனைவி ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஒன்று கோண்டாவிலில் நடைபெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி கூறப்படுவதாவது: அம்மன் கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் உசாதேவி என்ற 22வயது பெண் திருமணமாகி நாலு வருடங்களாகியும் பிள்ளை பிறக்காமையால் தினமும் வருந்திக்கொண்டே இருந்தாராம். சம்பவம் நடைபெற்ற தினத்தன்று மேற்படி அவர் தன் கணவரிடம் இறைச்சி வாங்கிவருமாறு அனுப்பிவிட்டு, வீட்டு வேலைகளை கவனித்துக் கொண்டிருந்தாராம். சில மணி நேரங்களின் பின்னர்கணவன்மேற்படிபெண்ணை காணுமையினுல் தேடிப்பார்த்த சமயம் அறைகளைப் பூட்டிவிட்டு கட்டிலில்குப்புறக் கிடப்பதைக் கண்டாராம். கதவை உடைத்து பார்த்த சமயம் பசும்பாலில் நச்சுத் திராவகத்தைக் கலந்து குடித்த பின்னர் ஒரு கிண்ணத்தில் மீதியிருக்க கண்டாராம். யாழ் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு சென்றபோது உயிர் பிரிந்துவிட்டதென தெரிய வந்ததாம்.

இம் மரணம் சம்பந்தமாக விசாரணை நடாத்திய மரண விசாரணை அதிகாரி திரு, பிரான்சிஸ் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (கு-உ)

## கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம், திங்கள் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் பாடசாலை மாணவர் ஆசிரியர் ஜே. எஸ். கிறிஸ்ததாஸ் தலைமையில் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

காரைநகர் 'சீநோர்' தொழிற்சாலை, சங்கானை மட்பாண்டக்கூட்டுத்தாபனம், பலாலிவிமானநிலையம், அச்சுவேலித்தைதொழிற்பேட்டை, ஈழநாடு பத்திரிகைக்காரியாலயம் உட்பட பலஇடங்களை இவர்கள் பார்வையிட்டனர். இச்சுற்றுலாவில் ஆசிரியர்கள் திரு. எம். சிவானந்தம், ப. மகேந்திரன், செல்வி வ. ஆறுமுகம், செல்வி செ.முருகேசு, திருமதி. வி. சிவகுருநாதன் ஆகியோரும் மாணவர்களுடன் கலந்து கொண்டனர். (கி-இ)

## யாழ். வளாக...

( 1-ம் பக்கத்தொடர்ச்சி)

மூடப்பட்டு, ஆர்கஸ்ட் மாதம் 1-ம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என்று யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் க.கைலாசபதி தெரிவித்தார்.

யாழ். வளாகத்தினர் புதிய கல்வி ஆண்டும் ஆகர்ஸ்ட் மாதம் 1-ம் திகதி ஆரம்பமாகிறது. (கு)

• • •

## இல்ல விளையாட்டு

யாழ்ப்பாணம், திங். யாழ். இந்துக் கல்லூரித் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும். யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. பொ. ச. குமாரசாமி பிரதம விருந்தினரர்கக் கலந்து கொள்கின்ருர். திருமதி சிவபாக்கியம் குமாரசாமி பரிசில்களை வழங்குவார். (இ)